8th August 1966]

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, இதுவரை கைது செய்யப்பட்டிருக்கிறவர்களில் அதிகாரிகள் எத்தனை பேர்? கன்டிராக்டர்கள் எத்தனை பேர்?

கனம் திரு. வெ. ராமைய்யா: அதிகாரிகள் 16 பேர்கள். கன்டிராக்டர்கள் 19 பேர்கள்.

திரு. எஸ். மணி: தலைவர் அவர்களே, இன்னும் கைது செய்யப்பட வேண்டிய அதிகாரிகள் அங்கே நிறைய இருப்பதாக அந்த வட்டாரத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்; பிடிபடாத நிலையில் இருக்கும் குற்றவாளிகளையும் பிடிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: நான் ஆரம்பத்தில் சொன்னேன், பரிசீலனை நடந்துகொண்டிருக்கிறது என்று. கனம் அங்கத்தினரிடம் ஏதாவது விவரம் இருந்தால் இன்வெஸ்டிகேஷன் போலீசாரிடம் கொடுக்கலாம். 9-00 a.m.

SRI S. MADHAVAN: Sir, under rule 40 of the Assembly Rules, I request that an half-hour debate be allowed on the subject matter of this question. A huge amount is involved. . .

MR. SPEAKER: The Hon. Minister has already replied that the matter is under investigation.

SRI S. MADHAVAN: The Hon. Minister cannot give any opinion. But he can give the facts, how much fraud has been committed, who are involved and so on.

MR. SPEAKER: There is no doubt about the rule, and the hon. Member can claim an half-hour debate. But, as the matter is under investigation, I do not think I can allow it now.

விளை பொருள்கள் பேரில் வரி

**216 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்:* கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விவசாயிகளுக்கு, அவர்கள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களின் அடிப்படையில் வரி விதிக்கும் யோசனை ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இல்லை.

திங்கள் கிழமைகளில் உணவு விடுதிகள் அடைப்பு

**217 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி:*
திரு. மு. கருணாநிதி:
திரு. செ. மாதவன்:
திரு. கரு. சீமைச்சாமி:
} கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் திங்கட்கிழமைதோறும் உணவு சாலைகள், சிற்றுண்டி சாலைகள், அனைத்தையும் மாலையில் மூடிவிடும்படி அரசாங்கம் உத்திரவு பிறப்பித்துள்ளதா?